செ.வெ.எண்: 43 நாள்: 26.01.2021

## கரூர் மாவட்டம்

## ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் மூலம் நடப்பாண்டு காரி.ஃப் பருவத்தில் துவரை கொள்முதல் செய்யப்படுகிறது – மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சு.மலர்விழி,இ.ஆ.ப.,அவர்கள் தகவல்

மத்திய அரசின் ஆதாரவிலை திட்டத்தின் கீழ் (PSS) 2020-2021 ஆம் ஆண்டு காரிப் பருவ காலத்தில் அறுவடை செய்யப்படும் துவரை விளைபொருளை 09.04.2021 முடிய கரூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் மூலம் கொள்முதல் செய்திட தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டதின் மூலம் கொள்முதல் செய்யப்படவுள்ள துவரை கீழ்காணும் நியாயமான சராசரி தரத்தின்படி (Fair Average Quality) இருத்தல் வேண்டும். விவசாயிகளால் கொண்டு வரப்படும் துவரை பயறானது இதர தானியங்களின் கலப்பு இல்லாமலும், சேதம் அடையாமலும், முதிர்வடையாத சுருங்கிய நிலையில் இல்லாமலும், வண்டுகள் தாக்காமலும் மற்றும் ஈரப்பதம் 12 சதவிதத்திற்கு குறைவாகவும் இருத்தல் வேண்டும்.

### விதிமுறைகள்

1. துவரை விளைபொருளுக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்ச ஆதார விலை ரூ.6000(குவிண்டாலுக்கு ) கொள்முதல் செய்யப்படும்.
2. கொள்முதல் செய்யப்படும் துவரைக்கான தொகை விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும்.
3. மேலும் இத்திட்டத்தில் பயன்பெற விவசாயிகளின் சிட்டா அடங்கலில் துவரை சாகுபடி பரப்பளவு இடம் பெற்றிருக்க வேண்டும், வங்கி கணக்கு புத்தகம் மற்றும் ஆதார் அட்டை நகல் பெற்றிருக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

### ஒழுங்குமுறை விற்பனைக்கூட முகவரிகள்:

மோற்பார்வையாளர், ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், பாப்பாக்காபட்டி (அஞ்சல்), அய்யர்மலை, இரும்பூதிப்பட்டி, கரூர் மாவட்டம். அலைபேசி எண். 8838793539 மற்றும் சீனிவாசன் தோட்டம், கீழபஞ்சம்பட்டி, பெட்ரோல் பங்க் அருகில், பஞ்கம்பட்டி மெயின்ரோடு, கிருஷ்ணராயபுரம் தாலூக்கா, கரூர் மாவட்டம். அலைபேசி எண் : 99931 5486

இந்த அரிய வாய்ப்பினை கரூர் மாவட்ட துவரை பயிரிட்டுள்ள விவசாயிகள் பயன்படுத்தி தங்களது விளைபொருளினை விற்பனை செய்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்**